**O.S.No. 174/2012**

**DW2 : செந்தில்குமார்** தேதி 02.12.2025

**பிவாசா 2 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

திருவேங்கடம்பாளையத்தில் நான் பிறந்ததில் இருந்து குடியிருந்து வருகிறேன். நான் Diploma in mechanical படித்திருக்கிறேன். வேறு தொழில் செய்யவில்லை. சின்னராமணகவுண்டர் எப்போது இறந்தார் என்றால் என்னுடைய சிறு வயதிலேயே இறந்துவிட்டார். பவளத்தாம்பாளையத்தில் என் தாத்தா மற்றும் அவருடைய மனைவி சொத்தை கிரையம் வாங்கும் போது நான் பிறக்கவில்லை. அவர்கள் எவ்வாறு கிரையம் வாங்கினார்கள் என்று தெரியாது கேள்வி பட்டு தான் தெரியும். திருவேங்கடம்பாளையத்தில் உள்ள சுள்ளிகாடு பரயன்காடு எவ்வாறு வாங்கப்பட்டது என்பது எனக்கு தெரியாது என்றால் சரியல்ல என் தாத்தா சொல்லியவகையில் 1922 ல் பரயன்காடு வாங்கியதாக எனக்கு தெரிய வந்தது. சுள்ளிகாடு 1950 ல் வாங்கியதாகவும் தெரிந்து கொண்டேன். அதை தவிர வேறு சொத்துகள் 1933 ல் ஓடைக்காடு என்ற இடத்தில் 60 செண்ட் வாங்கப்பட்டது.